முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1221

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.02.2023**, புதன்கிழமை

1. தர்மம் காக்க வந்த தலைவனே
   தமிழகம் தொட்டுஇந்த பேருலகையேமாற்ற
   ஆறுமுகனார்என் மகாசூட்சும மார்க்கமாக
   அன்னதானமோடு சன்மார்க்கநெறி அருளுகின்ற
2. அருளுகின்ற குருராஜனே அரங்கனே
   அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 18 ம் நாள் 01.02.2023, புதன்கிழமை)
   அறம்வழி உலகத்தை மாற்ற வந்த
3. வந்தநல் மாதவசி நீயப்பா
   வையகத்தை காக்கும் குருவும்நீயப்பா
   ஒப்புகொண்டு உன்னை உலகோர்ஏற்றால்
   உலகமாற்றம் உடன் நடந்தேறும்
4. நடந்துவரும் இன்னல்கள் அனைத்துமே
   நானிலத்தைவிட்டு அரங்கன்உன் கொள்கையாலே
   தடையின்றி விலகியோடி உலகே அமைதிபெறும்
   தர்மத்தால் இந்தஉலகம் பாதுகாப்புப்பெறும்
5. காப்புத்தந்து எல்லா சக்தியுமாக
   கருணைவழி அரங்கன்உன் தயவின்வழி
   பேருலகம் மாற்றம் கண்டுவர
   பிரணவக்குடில் கொண்டுத்தான் இந்த அற்புதத்தை ஆறுமுகன்யான் நடத்துவேன்
6. நடத்தவே ஓங்காரக்குடில் நோக்கி
   ஞானம் வேண்டி வந்தவர்க்கெல்லாம்
   தடையற ஞானசித்தி உறுதி
   தவமோடு தர்மமாக அனைத்து சக்திகளும் கூடி
7. கூடியே அரங்கன் உன்னால் குவலயம்
   குறைவின்றி மாற்றம் பெறும்
   ஈடேறும் உன் தொண்டர்கள் அனைவருக்கும்
   இனிபிறவா பெரும்பேற்றின் உயர்வுநிலை
8. நிலைகாண நிலைத்தன்மை கொண்ட அரங்கன் உன்வழி
   நிலைத்து நிற்கின்றேன் ஆறுமுகன் யான்
   பிழையற உன் நோக்கம் வெற்றிகொள்ளும்
   பேருலகமே ஞான லோகமாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–